# D E P O S I T I O N   OF  W I T N E S S

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, PALLAVARAM.

Case No. CC.No. 232 /2023

Old No. 348/2020

PW.1

| | |
|---|---|
| Name | : Tmt. Vijayalakshmi |
| Father/Husband Name | : Venkatakrishnan |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 08.11.2023.

**குறுக்கு விசாரணை**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வீட்டிலேயே தையல் வேலை செய்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்துபவரா என்றால் இல்லை. எனக்கு குரோம்பேட்டை கனரா வங்கியில் வங்கி கணக்கு உள்ளது. எனக்கு இந்தியன் வங்கியிலும் கணக்கு உள்ளது. வேறு எந்த வங்கியிலும் கணக்கு இல்லை. மகளிரின் குபவின் பெயரில் வங்கி கணக்கு உள்ளது அந்த குபவில் நான் ஒரு உறுப்பினா் ஆவாா். மேற்படி மகளிா் குழுவில் எதிரியின் மனைவி உறுப்பினராக உள்ளரா என்றால் இல்லை. அந்த மகளிா் குழுவின் பெயா் ஸ்ரீகிருஷ்ணா மகளிா் குபவாகும். அதை தவிா்த்து நான் எந்த குழுவிலும் உறுப்பினராக இல்லை.

எதிரியின் மனைவி தேவி என்பவரை எனக்கு 12 வருடங்களாக தெரியும். நானும் எதிரியின் மனைவி தேவியும் மகளிர் குழுவின் லோன் சம்பந்தமாக ஏதேனும் மனுக்கள் தயார் செய்தோமா என்றால் இல்லை. எதிரியின் மனைவி தேவி என்பவருக்கு எனது ஆதார கார்டை வைத்து ரூ.30 ஆயிரத்து மூன்று முறை லோன் வாங்கி கொடுத்துள்ளேன். மேற்படி மூன்று லோனுக்கும் ரூ. 1,20,000/- செலுத்த வேண்டியுள்ளது நான் தான் செலுத்தி வருகிறேன்.

எதிரிக்கு நான் வழக்கு காசோலை தொகையான ரூ.7,00,000/- மூன்று, நான்கு தவணையாக வெளியில் வாங்கி கொடுத்தேன். முதல் தவணையாக ரூ.1,00,000/- லட்சம் வாங்கி கொடுத்தேன். 2வது தவணை ரூ.70,000/- கொடுத்தேன். 3 வது தவணை ரூ. 1,50,000/- கொடுத்தேன். 4வது தவணையாக ரூ. 2,00,000/- கொடுத்தேன். முதல் தகவணை ரூ.1 லட்சத்திற்கு மாதம் 3 சதவீதம் வட்டிக்கு வாங்கி கொடுத்தேன். 1 வருடத்திற்கு எதிரியின் குடும்பம் வட்டி கட்டி வந்தது. எதிரி வட்டி கட்டாததால் அதன் பின்பு 1 வருடம் வட்டி நான் கட்டி வந்தேன். மேற்படி நான்கு தவணைகளும் 2வருடத்திற்குள் வாங்கி கொடுத்தேன்.

முதல் தவணையை சுபா என்ற நபரிடம் வாங்கி கொடுத்தேன். 2வது தவணையை கௌவுரி என்ற நபரிடம் வாங்கி கொடுத்தேன் அதற்கு நான்கு மாதங்கள் வட்டி கட்டி வந்தார். மூன்றாவது தவணையை லட்சுமி என்ற நபரிடம் ரூ 2,00,000/-வாங்கி கொடுத்தேன். மூன்றாவது தவணை ரூ.1,50,000/- நான் எனது நகையை வைத்து கொடுத்தேன். அதற்கு வட்டி எதுவும் வாங்க வில்லை. 4வது தவணை ரூ- 2,00,000த்தை லட்சுமி என்பவரிடமிருந்து வாங்கி கொடுத்தேன். மீண்டும் ரூ.60,000/-நகை வைத்து எதிரிக்கு கொடுத்தேன். மேற்படி 2வருடத்திற்கு முன்பு தான் இந்த 5வது தவணையை கொடுத்தேன்.

சட்ட அறிவிப்பினை அனுப்பிய வழக்கறிஞரிடம் வழக்கில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளையும் குறிப்பிட்டுள்ளேன். அவற்றை எல்லாம் கூறி நோட்டீஸ் அனுப்பியதாக என்னிடம் கூறினார். நான் என்னுடைய சட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்திலும், மனுவியிலும், பிரமாண வாக்குமூலத்திலும் முழுமையாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆம்.

மசாஆ3 ல் உள்ள முதல் பத்தியில் குறிப்பிட்டுள்ள வாசகங்களை ஆங்கில நபரால் பொருள் புரிந்துக்கொள்ள முடியாதவாறு உள்ளது என்றால் சரிதான். அதன் காரணமாக

மசாஆ3 செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. ஐந்து தவணையாக கொடுத்த பணத்திற்கு யாரிடம் வாங்கினோ அந்த நபர்கள் இருந்தார்கள். பணத்தை எதிரியின் குடும்பத்தினர் பெற்றார்கள். முதல் தவணையை எதிரி வீட்டிற்கு சென்று கொடுத்தேன். 2வது தவணை பணத்தை என் வீட்டுக்கு எதிரே உள்ள கௌவுரி வீட்டுக்கு வந்து எதிரியின் மனைவி மற்றும் மகன் வந்து வாங்கினார்கள்.

4வது தவணை தொகையை எதிரி மற்றும் அவரது மனைவி வாங்கியுள்ளார். மேற்படி விவரத்தினை, சட்ட அறிவிப்பில், பிரமாண வாக்குமூலத்திலும் குறிபிட்டுள்ளேன் என்றால் சரிதான். தவணை பற்றிய விவரங்கள் மற்றும் யாரிடம் பெற்று கொடுத்தேன் என்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளேன். எனக்கு வட்டி விடும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை.

எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.